கரூர் நெரிசல் 41 பேர் பலியான சம்பவம் குறித்து ஜூலை 7 இல் அளித்த புகார் மனு

# விசாரணை மற்றும் உரிய நடவடிக்கைக்காக சி.பி.ஐ.க்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதிக்கு மேற்பார்வைக் குழுவின் தலைவர் நீதிபதி அஜய் ரஸ்தோகி பதில்!

புதுடெல்லி, ஜூலை 11– கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் 07.07.2026 அன்று கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பான சிபிஐ. விசாரணை மேற்பார்வைக் குழுவிடம் அளித்த புகாருக்கு மேற்பார்வைக் குழுவின் தலைவரான ஓய்வு பெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி அவர்களின் அலுவலகம் “விசாரணை மற்றும் உரிய நடவடிக்கைக்காக அப்புகார் சிபிஐக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக” பதில் தெரிவித்துள்ளது.

கரூர் நெரிசல் சம்பவம் தொடர்பான சிபிஐ (CBI) விசாரணையை மேற்பார்வையிடுவதற்காக, உச்ச நீதிமன்றத்தின் SLP (Crl.) எண் 16359/2025 இன் உத்தரவின்படி அமைக்கப்பட்ட மேற்பார்வைக் குழுவிடம், திராவிட முன்னேற்றக் கழகத்தின் (திமுக) அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி அவர்கள் 07.07.2026 அன்று ஒரு புகாரை அளித்துள்ளார்.

அப்புகார் பரிசீலிக்கப்பட்டதாகவும், நியாயமான விசாரணை மற்றும் உரிய நடவடிக்கைக்காக அது சிபிஐக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் மேற்பார்வைக் குழுவின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி அஜய் ரஸ்தோகி அவர்களின் அலுவலகம் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

திருவள்ளூர் மாவட்ட தலைமை அரசு மருத்துவக் கல்லூரி

# மருத்துவமனையில் த.வெ.க. ஆட்சியின் அவல நிலை!

## அடிப்படை வசதியின்றி மக்கள் அவதி!

திருவள்ளூர் ஜூலை 11 – திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகம் திருவள்ளூர் மாவட்டத்தில் பெரியகுப்பம் கிராமத்தில் 8.48 ஏக்கர் பரப்பளவில் 6 அடுக்கு கொண்ட மருத்துவமனை கட்டிடம் கடந்த 2022 ஆம் ஆண்டு சுமார் 3 இலட்சத்து 60 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் தற்போது 1000 படுக்கை வசதியுடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதில் பொது மருத்துவ பிரிவு, பொது அறுவை சிகிச்சை பிரிவு, அதிதீவிர சிகிச்சை பிரிவு, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, மயக்கவியல் துறை, பல் நலவியல் துறை, எலும்பியல் மற்றும் முடநீக்கியல் துறை, கண்மருத்துவத் துறை, காது மூக்கு தொண்டை மருத்துவத்துறை, தோல் மருத்துவத்துறை, நெஞ்சக மற்றும் காச நோய் மருத்துவத் துறை, இரத்த வங்கி, தீக் காயங்கள் சிகிச்சை அளிக்கும் பிரிவு, மனநல மருத்துவத்துறை, மேம்படுத்தப்பட்ட மத்திய ஆய்வகம், கதிரியக்கவியல் துறை, இயன்முறை சிகிச்சை பிரிவு, திரவ நச்சு நீக்கியல் பிரிவு மற்றும் 10 அறுவை சிகிச்சை அரங்கமும், 98 படுக்கை வசதியுடன், 6 திவிர, அதிதீவிர, உயர் சார்பு தீவிர சிகிச்சை பிரிவும் உள்ளது. இதில் அனைத்து விதமான உயிர் காக்கும் சிகிச்சை அளிக்கும் இயந்திரங்கள் உள்ளன. மகப்பேறு மற்றும் தாய்சேய் நல சிகிச்சை பிரிவுக்கென 200 படுக்கை வசதிகள் கொண்ட எம்சிஎச் வார்டு தற்பொழுது செயல்பட்டு வருகிறது.

இந்த மருத்துவமனை செயல்பட தொடங்கியது முதல் நாள்தோறும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளி நோயாளிகள் இங்கு வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். திருவள்ளூர் மாவட்டம் மட்டுமல்ல அது ராணிப்பேட்டை மாவட்டத்தை சேர்ந்த அரக்கோணம் உள்ளிட்ட பகுதிகளில் ஏற்படும் விபத்துக்கள் மற்றும் அங்கு தீர்க்கப்படாத நோய்களுக்கு இங்கு வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்நிலையில் திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த கிராம மக்கள் தங்களுக்கு ஏற்பட்டுள்ள உடல் உபாதைகளுக்கு மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று செல்வதுண்டு. அவ்வாறு வரும் புற நோயாளிகளுக்கு துண்டு சீட்டு ஒன்று எழுதி கொடுத்து அதை பதிவேற்றம் செய்து மருத்துவர்கள் சிகிச்சை அளித்து வந்தனர். இந்த தவெக ஆட்சியில் மருத்துவமனையில் ஆயிரம் கணக்கில் வரும் புறநோயாளிகள் குடிநீர் வசதி, கழிவறைகள் மூடியே கிடக்கின்றன. இதனால் துர்நாற்றம் வீசுகிறது.

ஆனால் கடந்த திமுக ஆட்சியின் போது வெளி நோயாளிகள் ஒரு முறை வந்தவர்கள் அடுத்த முறை வரும்போது மீண்டும் வரிசையில் நின்று வாங்காமல் நேரடியாக நோய் சம்பந்தப்பட்ட மருத்துவரை நேரில் சென்று சிகிச்சை பெற ஏதுவாக வெளி நோயாளி அட்டை ஒன்று வழங்க உத்தரவிட்டது.

அதன்படி மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் திருவள்ளூர் மாவட்டத்தை சேர்ந்த எந்த ஒரு நோயாளியும் இங்கு பதிவு செய்யும் போது தனது பெயர், முகவரி, செல்போன் எண், ரத்த வகை போன்ற விவரங்களை அதில் பதிவிட்டு அட்டை ஒன்றை வழங்குவார்கள். அந்த அட்டையை ஒரு முறை வந்தவர்கள் மற்றொரு முறை வரும்போது மருத்துவர்களை பார்ப்பதற்கான சீட்டு வாங்க வரிசையில் நிற்காமல் நேரடியாக மருத்துவரை சென்று பார்க்க ஏதுவாக இந்த அட்டை உதவியது.

இந்நிலையில் ஆட்சி மாற்றத்திற்கு பிறகு ஆதார் அட்டையையும் நோயாளிகளிடமிருந்து பெற்று அதனை ஆன்லைனில் பதிவேற்றம் செய்து அந்த லிங்கை நோயாளிகளின் செல்போனுக்கு அனுப்பிவைக்க உத்தரவிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இந்த லிங்கை பயன்படுத்தி அடுத்த முறை நோயாளிகள் மருத்துவமனைக்கு வரும் போது வரிசையில் நிற்காமல் செல்போனிலேயே எந்த நோய்க்கு எந்த மருத்துவரை பார்க்க வேண்டும் போன்ற விவரங்களை பதிவு செய்து நேரடியாக சென்று பார்க்க உதவும் என மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஆனால் மருத்துவமனைக்கு வரும் நோயாளியின் முழு விபரங்களையும் கணினியில் பதிவேற்றம் செய்து அந்த லிங்க் எடுத்து கொடுப்பதற்கு நேரம் ஆவதால் நோயாளிகள் நீண்ட நேரம் வரிசையில் காத்து நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக நோயாளிகள் தெரிவிக்கின்றனர். சாதாரண ஏழை எளிய மக்கள் ஆண்ட்ராய்டு போன் இல்லாத பொதுமக்கள் என்ன செய்வது எனறு தெரியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

மேலும் புற நோயாளிகளின் அனுமதி சீட்டுக்காக கூடுதலாக கவுன்ட்டர்களை திறந்து நோயாளிகளை நீண்ட நேரம் நிற்க வைக்காமல் அனுப்ப ஏதுவாக மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



நாகை மாவட்டம் நாகை நகரம் நம்பியார் நகரில் உள்ள மாணவி ர.ஆசிதா என்பவரின் கல்விச் செலவுக்காக, ரூ.25,000 ம் கழகத் தலைவர் தளபதி அவர்கள் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளரும, தமிழ்நாடு எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் தி.மு.க. இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்ட தொகைக்கான காசோலையை நாகை மாவட்ட கழக அலுவலகத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் வழங்கினார். உடன் மாவட்ட கழக பொருளாளர் மு.லோகநாதன் , மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பி.என். கார்த்தி, துணை அமைப்பாளர் தி.கலையரசன் , மாவட்ட அயலக அணி துணை அமைப்பாளர் ஆர்.கே.பிரதீப், நகர இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.எஸ்.சத்தியன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்..

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பெரி. அழகு

**ஜூலை 11 (1997)**



கழகம் துவங்கிய காலத்திலிருந்தே கழகப் பணியாற்றியவர். திருப்பத்தூர் தொகுதியின் வட்டச் செயலாளராக பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர். பின்பு இராமநாதபுரம் மாவட்டப் பொறுப்பாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

சிவபுரிபட்டி ஊராட்சித் தலைவராகவும், சிங்கம்புணரி ஒன்றியப் பெருந்தலைவராகவும் பணியாற்றி மக்களிடம் நற்பெயர் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்றதுடன், குறிப்பாக இந்தி எதிர்ப்பு போராட்டத்திலும் – மிசா கைதியாக ஓராண்டு காலம் மதுரை மத்திய சிறையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

கரூரில் – விஜய் பங்கேற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில்

# அனுமதி பெற்றுச் சென்ற செய்தியாளர்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றம்!

## செய்தியாளர்கள் – காவல்துறை வாக்குவாதம்!

கரூர், ஜூலை 11 - கரூரில் முதலமைச்சர் விஜய் பங்கேற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் செய்தியாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதற்கு கண்டனங்கள் எழுந்து வருகின்றன.

கரூரில் விஜய் கட்சியின் பிரச்சாரக் கூட்டத்தில் நேர்ந்த கொடுந்துயரத்திற்கு பிறகு விஜய், நேற்று கரூர் சென்றார். கரூரில் உள்ள தனியார் கல்லூரியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் முதலமைச்சர் விஜய் பங்கேற்க உள்ளார். இதற்காக செய்தியாளர்களுக்கு முன்னதாக அனுமதி வழங்கப்பட்ட நிலையில், விஜய் நிகழ்ச்சிக்கு வருவதற்கு சிறிது நேரம் முன்பு செய்தியாளர்களை காவல்துறையினர் வெளியேற்ற வற்புறுத்தினர்.

அப்போது காவல்துறையினருடன் செய்தியாளர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்ட போது, கரூர் எஸ்.பி ஹரி கிரண் பிரசாத் நேரில் வந்து செய்தியாளர்களை வலுக்கட்டாயமாக வெளியேற்றினார். ஜனநாயகத்தின் 4ஆம் தூணான ஊடகத்தையே ஒரு முதலமைச்சர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் அனுமதிக்காததற்கு கண்டனம் எழுந்துள்ளது.

தி.மு.க.தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தலைமையில்

# தி.மு.க. தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா!

## ஏழை எளியோருக்கு நல உதவிகளுடன் அறுசுவை உணவு வழங்கும் விழா!

சென்னை, ஜூலை 11 - தி.மு.க. தொண்டர் அணியின் சார்பில் காலத்தை வென்றவரும் அரசியல் ஞானியுமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103ஆம் பிறந்த நாள் விழா வினையொட்டி, நாளை (12.07.2026 - ஞாயிற்றுக் கிழமை) மாலை 5.00 மணியளவில், காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் ஒன்றியம், நீர்ப்பெயர் ஊராட்சியில் உள்ள “மேல்வசலை கிராமத்தில்” மாநிலத் தொண்டர் அணி மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ. சேகர் தலைமையில் - மாநிலத் தொண்டர் அணித் தலைவர் காஞ்சி ஜி.சுகுமாரன் அவர்கள் முன்னிலையில்;

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன்.சிவக்குமார், ஒன்றியக்குழு உறுப்பினர் இராமகிருஷ்ணன் ஆகியோர் நலத்திட்ட உதவிகள் வழங்கி அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

தொண்டர் அணி மாநிலத் துணைச் செயலாளர்கள் ப.கோமான், ஆவின் எம்.ஆறுமுகம், சுப.சரவணன், பி.எம்.முனிவேல், எஸ்.எம்.அன்பழகன், எஸ்.எம்.கே.அண்ணாதுரை, மாநிலப் பயிற்சியாளர் இ.குருதாஸ் மற்றும் மேல்வசலைக் கிளைக் கழகச் செயலாளர் மு.சண்முகம், கீழ்வசலைக் கிளைக் கழகச் செயலாளர்கள் கஜபதி, காத்தவராயன், நீலமங்கலம் கிளைக் கழகச் செயலாளர்கள் என்.டி.ஜெயபால், சிவானந்தன், தாமரைச்செல்வன், நீர்ப் பெயர் கிளைக் கழகச் செயலாளர் வாசுதேவன் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மேல்வசலை மு.கண்ணப்பன், கி.இராமசாமி, மா.ஆறுமுகம், முன்னாள் கவுன்சிலர், ஆதிகேசவன், இரவிச்சந்திரன், முன்னாள் கவுன்சிலர் ஆறுமுகம், கு.எத்திராஜ், மு.குமரன், கு.தேவதாஸ் செ. சிவக்குமார், இரஞ்சித் குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# ஈரான் மீது அமெரிக்கா புதிய வான்வழித் தாக்குதல்!

## வளைகுடா நாடுகள் மீது டெஹ்ரான் பதிலடி!

துபாய், ஜூலை 11 - ஈரான் மீது அமெரிக்கா புதிய வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதற்குப் பதிலடியாக பஹ்ரைன், குவைத் மற்றும் கத்தார் ஆகிய நாடுகளை இலக்கு வைத்து ஈரான் பதில் தாக்குதல் நடத்தியுள்ளது. இதன் மூலம் வளைகுடாப் போரை முடிவுக்குக் கொண்டு வர எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்தித்துள்ளன.

ஹார்முஸ் நீரிணையில் கப்பல்கள் மீது ஈரான் அண்மையில் தாக்குதல் நடத்தியது. இதையடுத்து ஈரான் மீது அமெரிக்கா நடத்திய இரண்டு நாள் வான்வழித் தாக்குதல்களில் ஈரானில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்; 78 பேர் காயமடைந்துள்ளனர். 90 இலக்குகள் மீது தாக்குதல் அமெரிக்க ராணுவத்தின் மத்திய கட்டளைப் பிரிவு, ஈரான் முழுவதும் சுமார் 90 இலக்குகளைத் தாக்கியதாகத் தெரிவித்துள்ளது.

உலகின் ஒட்டுமொத்த எரிசக்தி வர்த்தகத்தில் ஐந்தில் ஒரு பங்கு கடந்து செல்லும் ஹார்முஸ் நீரிணையில், கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் ஈரானின் நடவடிக்கைகளை சீர்குலைப்பதே இந்தத் தாக்குதல்களின் நோக்கம் என்று அமெரிக்கா கூறியுள்ளது.

ஈரானின் அணுமின் நிலைய வளாகம் அமைந்துள்ள புஷெஹ்ர், சாபஹார் உள்ளிட்ட பல முக்கிய துறைமுக நகரங்களில் குண்டுவெடிப்புகள் நிகழ்ந்ததாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. மேலும், முதன் முறையாக ஈரானியப் பாலங்களையும் அமெரிக்கா இலக்கு வைத்துள்ளது. துருக்கியில் நடைபெற்ற நேட்டோ உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு வந்த பிறகு, ட்ரம்ப் தனது சமூக ஊடகப் பக்கத்தில் ஈரானில் நிகழ்ந்த குண்டு வெடிப்புகள் என்று கூறி சில வீடியோக்களைப் பகிர்ந்துள்ளார். ஈரானுக்கு மற்றொரு எச்சரிக்கையையும் விடுத்துள்ளார்.

“கப்பல்கள் மீது ஈரான் நடத்திய குண்டு வீச்சுக்கு பழிவாங்கும் நடவடிக்கை இது. இச்செயல் மீண்டும் நடந்தால், நிலைமை இன்னும் மோசமாகும்” என்று ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

மேலும், மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் கடல் நீரைக் குடிநீராக்கும் நிலையங்கள் உள்ளிட்ட ஈரானின் பொது உள் கட்டமைப்புகளைத் தாக்குவதற்கும், எண்ணெய் உற்பத்தியின் முக்கிய மையமான கார்க் தீவைக் கைப்பற்றுவதற்கும் தான் விடுத்த பழைய அச்சுறுத்தல்களை டிரம்ப் மீண்டும் கையில் எடுத்துள்ளார்.

போரை நிறுத்து வதற்கான தற்காலிக ஒப்பந்தம் “முடிந்துவிட்டது” என்று ட்ரம்ப் கூறினார். இதற்குப் பதிலளித்த ஈரானின் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாஃப், “நீங்கள் தாக்கினால், உங்களுக்கும் அடி விழும்” என்று எக்ஸ் தளத்தில் சவாலாகப் பதிவிட்டுள்ளார்.

பிப்ரவரி 28 அன்று கொல்லப்பட்ட கமேனியின் இறுதிச் சடங்குகளுக்குப் பிறகு, நீரிணையை முழுமையாக மீண்டும் திறப்பது மற்றும் அணு சக்தித் திட்டம் உள்ளிட்ட முக்கியமான விஷயங்கள் குறித்து இருதரப்பும் பேச்சுவார்த்தை நடத்தவிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை கணிசமாக உயர்ந்ததுடன், ஒட்டுமொத்த மத்திய கிழக்கிலும் மீண்டும் போர் வெடிக்குமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. சர்வதேச நீர்வழியில் வணிகக் கப்பல்களைத் தாக்கியதற்குப் பதிலடியாக, ஈரானின் வான் பாதுகாப்பு அமைப்புகள், ரேடார்கள் மற்றும் புரட்சிகரக் காவல் படையின் 60க்கும் மேற்பட்ட சிறிய படகுகளை அமெரிக்க ராணுவம் தாக்கி அழித்துள்ளது.

கப்பல்கள் மீதான ஈரானின் தாக்குதலைத் தொடர்ந்து, தற்காலிக ஒப்பந்தத்தின் கீழ் ஈரானுக்கு வழங்கப்பட்டிருந்த அமெரிக்க டாலர்களில் பகிரங்கமாக எண்ணெய் விற்பனை செய்யும் உரிமத்தை அமெரிக்கா அதிரடியாக ரத்து செய்துள்ளது. இதன் விளைவாக ஈரான் இனி மேல் உலக சந்தையில் வெளிப்படையாக எண்ணெய் விற்பனையை டாலர்களில் சம்பாதிக்க முடியாது. இதனால் ஈரானுக்குப் பொருளாதார ரீதியாக மிகப்பெரிய நெருக்கடி ஏற்படும் சூழலும் ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் உணர்வுகளுக்கு எதிரான –

# ஆசிரியர் தேர்வு வாரிய அறிக்கையை திரும்பப் பெறுக!

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாநிலப் பொதுச் செயலாளர் நா.சண்முகசுந்தரம் கோரிக்கை!



புதுக்கோட்டை, ஜூலை 11 - ஆசிரியர்களின் உணர்வுகள் புண்படும் படி வெளியிட்டுள்ள ஆசிரியர் தேர்வு வாரிய அறிக்கையை திரும்பப் பெற வேண்டும் என தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில பொதுச் செயலாளர் மன்றம் நா.சண்முகநாதன் கோரிக்கை விடு த்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது:

தமிழ்நாட்டை கல்வியில் சிறந்த தமிழ்நாடாக உயர்த்திக் காட்டிய தொடக்கக் கல்வி ஆசிரியர்களை உச்ச நீதிமன்ற தீர்ப்பின் காரணமாக ஆசிரியர் தகுதித் தேர்வு எழுத வேண்டிய நிலைக்கு லட்சக்கணக்கான ஆசிரியர்கள் தள்ளப்பட்டார்கள். 25 ஆண்டுகள் 30 ஆண்டுகள் கல்விப் பணியாற்றிய ஆசிரியர்கள் பணியை தொடர்வதற்கு ஏதோ நியமனத் தேர்வு எழுதுவது போல பல்வேறு நெருக்கடிகளுக்கு ஆளாகும் நிலை ஆசிரியர்களிடையே பதட்டத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்நிலையை மாற்றுவதற்கு தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் உடனடியாக தொடக்க கல்வி ஆசிரியர் இயக்கங்களின் தலைவர்களை அழைத்து பேசி நல்ல தீர்வினை ஏற்படுத்திட வேண்டும்.

முழுக்கல்வித் தகுதியோடு பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரின் பணியை பாதுகாத்திடும் வகையில் தனிச் சட்டம் தமிழ்நாடு சட்டமன்றத்தில் இயற்ற வேண்டும்.

பணியாற்றும் ஆசிரியர்களுக்காக நடைபெற்ற தகுதித் தேர்வில் பணியாற்றிய காலத்தின் அடிப்படையில் வெயிட்டேஜ் மதிப்பெண் வழங்கிட வேண்டும்.

பள்ளிப் பாடத்திட்டத்தில் இருந்து வினாக்கள் கேட்கப்பட வேண்டும்.

மேற்கு வங்காளம் போன்று தேர்ச்சி மதிப்பெண் குறைக்கப்பட்டு சீரான மதிப்பு நிர்ணயம் செய்திட வேண்டும்.

பத்தாம் வகுப்பு , பனிரெண்டாம் வகுப்பு, ஆசிரியர் பட்டய படிப்பு,கல்லூரி படிப்பில் உள்ளது போல் அனைத்து பிரிவினருக்கும் ஒரே தேர்ச்சி மதிப்பெண் இருப்பது போல் சிறப்பு ஆசிரியர் தகுதி தேர்விலும் அனைத்து பிரிவு ஆசிரியர்களுக்கும் ஒரே விதமான குறைந்த பட்ச தேர்ச்சி மதிப்பெண்ணை தகுதி மதிப்பெண்ணாக நிர்ணயிக்க வேண்டும்.

ஆசிரியர் தேர்வு வாரியத்தின் அறிக்கை தமிழ்நாட்டின் ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் இருக்கும் நல்லுறவினை முற்றிலும் பாதிக்கக் கூடியதாக உள்ளது.எனவே

ஆசிரியர்களின் உணர்வுகள் புண்படும் படி வெளியிட்டுள்ள ஆசிரியர் தேர்வு வாரிய அறிக்கையை திரும்ப பெற வேண்டும்.

தேர்தல் வாக்குறுதியில் கூறிய படி தமிழ்நாடு அரசு தமிழ்நாட்டின் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களுக்கு பழைய ஓய்வூதியத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும். இடைநிலை ஆசிரியர்களுக்கு கடந்த இரண்டு ஊதியக் குழுவில் இழைக்கப்பட்ட அநீதிகளையப்பட்டு ஊதிய முரண்பாடுகளை நீக்கி மத்திய அரசு ஆசிரியர்களுக்கு இணையான ஊதியம் 01.01.2006 முதல் மீண்டும் வழங்கிட வேண்டும். தற்போது நடைமுறையில் உள்ள ஊதிய அட்டவணையில் ஊதிய நிலை எண் 10 க்கான செல் வரிசை 45 உடன் முடிவடைந்து விட்ட நிலையில் வருடாந்திர ஊதிய உயர்வு பெற முடியாமல் இடைநிலை ஆசிரியர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே செல் வரிசையை 45லிருந்து 50 ஆக மாற்றி அமைத்து வெளியிட வேண்டும்.

தொடக்கக் கல்வித்துறையில் நிறைவேற்றப்படாமல் உள்ள அனைத்து கோரிக்கைகளையும் விரைந்து நிறைவேற்றிட வேண்டும்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.